மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

வேளாண் கல்லூரி

***1432—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதியில் வேளாண் கல்லூரி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் சட்டமன்ற வரலாற்றில் ஒரு சரித்திர வரலாற்றைப் படைத்து, தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் அனைவராலும் போற்றிப் புகழுகின்ற அளவுக்கு நிதிநிலை அறிக்கையை உருவாக்கியிருக்கிற தமிழகத்தின் முதல்வர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானு கோடி நன்றி மலர்களை அவர்கள் பாதங்களுக்குத் தெரிவித்து என் விடையை அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் சார்ந்த மாவட்டமாகத் திகழும் குமரி மாவட்டத்தில் இருக்கும் விளவங்கோடு தொகுதியில், அதிகமான வேளாண் தோட்டக்கலை சார்ந்த தொழில்கள் நிலவி வருவதால், மக்கள் அதைச் சார்ந்து வாழ்ந்து வருவதால், நிச்சயமாக அந்தத் தொகுதியில் வேளாண் மற்றும் தோட்டக்கலை சார்ந்த கல்லூரி அமைக்கப்படுமானால், அது அந்தத் தொகுதிக்கு மட்டுமல்ல; குமரி மாவட்டத்திற்கே ஒரு பெரிய உறுதுணையாக இருக்கும் என்று*

2011 ஆகஸ்ட் 8]

தெரிவித்துக்கொண்டு, அவ்வாறான ஒரு கல்லூரியை அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரிடமும் அரசிடமும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதிக்கு அருகிலேயுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் கிள்ளிகுளத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி இயங்கி வருகிறது. விளவங்கோடு தொகுதி மாணவர்கள் மேற்கண்ட கல்லூரியிலே சேர்ந்து படிக்க ஏதுவாக உள்ளது. விளவங்கோடு தொகுதி அருகிலுள்ள திருப்பதிசாரத்தில் ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. ஆக, புதியதாக வேளாண்மைக் கல்லூரி ஒன்று உருவாக்குவதற்கு 40 கோடி ரூபாய் செலவாகும் என்பதாலும், 50 ஏக்கர் நிலம் வேண்டுமென்ற அடிப்படையிலும், வேளாண்மைக் கல்லூரிகளை பல்வேறு இடங்களிலே அமைக்க இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் கல்லூரி அமைக்கப்படவில்லையென்றாலும், இப்போது உள்ள அந்தக் கல்லூரியை மேலும் மேம்படுத்தி வசதிகள் செய்து தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, கோடானு கோடி திட்டங்களை மக்களுக்கு அற்புதமாக அளித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசிலே நியாயமான கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டம் விவசாயத்திலே சிறந்த ஒரு மாவட்டமாக விளங்குகிறது. குறிப்பாக, திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தான ஆட்சியின்போது நாஞ்சில் நாடு என்று சொல்லக்கூடியது கன்னியாகுமரி மாவட்டம். ஆனால், விவசாயப் பெருமக்களுக்கு எந்தவிதமான திட்டங்களும் கொடுக்கவில்லை. திருப்பதிசாரத்திலே ஓர் ஆராய்ச்சி மையத்தை வைத்திருக்கிறீர்கள். ஆனால் development-*ஏ இல்லை. நான் அன்பாக வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நிச்சயமாக ஒரு வேளாண்மைக் கல்லூரி வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, முதல் கேள்விக்கு நான் தெளிவாக பதிலளித்தேன்; ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்றால் 50 ஏக்கர் நிலமும் 40 கோடி ரூபாய் நிதியும் தேவைப்படுகிறது என்று. ஆராய்ச்சி நிலையங்கள் அங்கே இருக்கின்றன. அதை விரிவுபடுத்துவதற்கு, அந்தப் பகுதி மக்கள் நலன் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*